குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 22/2015

அ.சா.7

2023–ம் ஆண்டு நவம்பர் 20–ம் தேதி திங்கட்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 7 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 4.47 மணி,

Accused Shanmugam absent. Petiton U/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr.Kathiravan for accused. APP is Mr.M.Suresh present.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தர்மபுரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.08.2017 ம் தேதி ஓமலூர் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அக்காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.செங்கோடன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 730/2014 சட்டப்பிரிவுகள் 451, 380 இதச உ.இ 15(3), இந்தியன் மெடிக்கல் கவுன்சில் சட்டம் 1956 வழக்கில் முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணையின் நிமிர்தம் எனக்கு அனுப்பியிருந்தார் அதனை பெற்று அன்றைய தினம் பகல் 11.30 மணி சுமாருக்கு சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் விஜய் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**2.** சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் விஜய் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். சாட்சி மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் விசாரணையில் இருந்து சம்பவ இடத்தை பார்வை யிட்டதில்

இருந்து இவ்வழக்கில் புகாரில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் அன்றைய தினம் சுமார் 14.15 மணிக்கு பஞ்சுகாளிப்பட்டி பஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி சரவணன் என்பவரை தகவலாளி அடையாளம் காட்ட அவரைப் பிடித்து விசாரிக்க தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை முறைப்படி காவல் படுத்தி விசாரிக்க எதிரி எவ்வித துன்புறுத்தலும் அச்சுறுத்தலும் ஆசைவார்த்தைகளும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க முன்வந்ததால் தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட சாட்சிகளான அறிவழகன் மற்றும் சின்னன்னன் ஆகியோர் முன்னிலையில் எதிரி தாமாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் சொன்னவாறு பதிவு செய்தேன்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகள் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் இருந்து அய்யம்மாள் வீட்டில் திருடிய நகைகள் 3 தோடு, ஒரு பிரேசலட், மருந்து பையையும் ஆகியவை தங்களிம் ஒப்படைக்கிறேன். மேலும் என்னை கூட்டிச் சென்றால் அய்யம்மாள் வீட்டில் திருடிய மீதி நகைகளையும் பணம் ரூபாய் 15000 யும் யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருப்பதையும் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று வாக்குமூலம் கொடுத்தார். (மேற்படி எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).

4.அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரி அதே சாட்சிகளின் முன்னிலையில் ஆஜர் செய்த சுமார் 1 பவுன் எடையுள்ள பிரேசலட் ஒன்று, சுமார் 1/2 பவுன் எடையுள்ள மூன்று தோடுகள், Dispo van சிரஞ்சிகள் 5, ஜின்டேக் டேப் 10, ஏசிடிஐ ஊசி மருந்து 3 மருந்து பாட்டில்கள், 6 கண்ணாடி சிலேடுகளுடன் கூடிய Hopito அலுமினிய டப்பா ஒன்று, ரெக்சீன் பை 1 ஆகியவைகளை அன்றைய தினம் 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

5. பின்னர் எதிரி எங்களையும் சாட்சிகளை அவரது வீடான பி.நல்லாகவுண்டன்பட்டி காலணி, செல்லப்பிள்ளைக்குட்டையில் உள்ள அவரது வீட்டு முன்புள்ள தாழ்வாரத்தில் மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 3 பவுண் எடையுள்ள வலையல்கள் இரண்டு, 25.600 மில்லி கிராம் எடையுள்ள பதக்கச் செயின் ஒன்று, சுமார் 1 பவுன்

எடையுள்ள மோதிரம் ஒன்று, ரூபாய் 15000 பணம் (1000X15) நோட்டுகள் ஆகியவற்றை சுமார் 17.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி சாட்சிகள் கையொப்பம் பெற்றேன்.

6. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரியை திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து உரிய ஆவணங்கள் தயார் செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக் காவலுக்கு முறைப்படி அனுப்பி வைத்து சாட்சிகள் அறிவழகன் மற்றும் சின்னன்னன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. சாட்சிகள் அய்யம்மாள், மஞ்சுளா ஆகியோர்களிடம் வழக்கு சொத்தை காண்பித்து அவர்கள் அடையாளம் காட்டி உறுதிப்படுத்தினர். அந்த சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்குச் சொத்துகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் செங்கோடன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கு புலன் விசாரணை முடித்து எதிரி சரவணன் மீது சட்டப்பிரிவுகள் 451, 380 இதச உ.இ 15(3), இந்தியன் மெடிக்கல் கவுன்சில் சட்டம் 1956 கீழ் 30.10.2014 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

9. அ.சா.1 போலீஸார் விசாரணையில் எதிரி சரவணன் எனது வீட்டிற்கு வந்து கை கால் வலிக்காக ஊசி போடுவதாக சொன்னதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா. 1 போலீஸார் விசாரணையில் தனக்கும் தனது கணவருக்கு எதிரி சரவணன் மயக்க மருந்து கொடுத்து படுக்க வைத்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 போலீஸார் விசாரணையின் போது எதிரி மயக்க மருந்து கொடுத்ததால் தனக்கு நினைவில்லை என்று கூறியுள்ளாரா என்றால் இல்லை.

10. அ.சா.1 போலீஸார் விசாரணையில் எதிரி சரவணன் எனது வீட்டில் இருந்த பிரோவை திறந்து 3 பவுன் எடையுள்ள நெக்லஸ் – 1, 3 பவுன் எடையுள்ள வலையல் –2 , 1 பவுன் எடையுள்ள மோதிரம், 1 பவுன் எடையுள்ள கை ஜெயின், சுமார் 2 பவுன்

எடையுள்ள தோடுகள் 3 மற்றும் பணம் 32000 த்தை எடுத்து கொண்டதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1. புகாரை வாக்குமூலமாக கொடுத்தாகவும் போலீஸார் அதை எழுதிக் கொண்டதாகவும் எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரி.

11. அ.சா.2 போலீஸார் விசாரணையில் அ.சா.1 னின் வீட்டுக்காரருக்கு காலில் அடிப்பட்டு மருத்துவமனையில் வைத்து வைத்தியம் பார்த்து பின்பு நல்லம்பட்டி சென்று கால்கட்டு போட்டு வைத்தியம் பார்த்து வந்ததாகவும், அசா.1 னின் கணவருக்கு உடல் நிலை சரியில்லை என்று அவரது மருமகள் மஞ்சுளாவிடம் தகவல் சொன்ன போது அவர் மருத்துவர் ஒருவரை ஊசி போடுவதற்காக ஒருவரை அனுப்புவதாக கூறியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

12. அ.சா.2 போலீஸார் விசாரணையில் மாலை நேரத்தில் அவர் அ.சா.1 னின் வீட்டிற்கு சென்றபோது அ.சா.1 ம் அவரது கணவரும் மயக்கமாக இருந்ததாக சொல்லவில்லை. அ.சா.3 மஞ்சுளா எனது மச்சினன் விஜயகுமார் போன் செய்து அசா.1 னின் வீட்டில் இருந்த நகை மற்றும் பணம் திருடு போய்விட்டதாக தகவல் சொன்னதாக குறிப்பிடவில்லை. சம்பவத்திற்கு பின் 2 நாட்கள் தாமதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி.

13. புகாரில் அ.சா.1 எதிரிகள் மீது சந்தேகம் இருப்பதாக மட்டும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. தாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணத்தை அ.சா.1 குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ளார். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள வையாபுரி, சுந்திரம், முத்துகிருஷ்ணன் ஆகியோரை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரணைக்கா சென்றபோது அவர்கள் வீட்டில் இல்லை.

14. அ.சா.2 மணி சம்பவ இடத்திற்கு அருகில் வசிப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவருடைய வீடு வரைப்படத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. பார்வை மகஜரில் சாட்சிகளாக காண்பிக்கப்பட்டுள்ள நபர்களின் வீடுகள் அ.சா.1 னின் வீட்டிற்கு அருகில் இல்லை என்றால் சரி. சம்பவ இடத்தில் பிரோவில் இருந்த கை ரேகைகளை நான் சேகரிக்க வில்லை என்றால் சரியல்ல. பீரோவில் ரேகைகள் இல்லை. பீரோவில் கைரேகை இல்லை என்பதை உறுதி செய்ய கைரேகை நிபுணர்களை வரவழைத்து

விசாரணை செய்தேனா என்றால் இல்லை, புகார் தாமதமாக வந்த காரணத்தால் சம்பவ இடத்தில் உள்ள பீரோவை புகார்தாரர் தரப்பில் உள்ள நபர்கள் பயன்படுத்தியதால் எதிரியின் கைரேகை அழிக்கப்பட்டுவிட்டது.

15. சம்பவ இடத்தில் புகார் தாரர் தரப்பில் யார் யார் பீரோவை பயன்படுத்தினார்கள் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் ஆனால் வழக்கு ஆவணங்களில் அவற்றை குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் வழக்கில் ஈடுபட்டுள்ள பொருட்களில் எத்தனை கை ரேகைகள் இருந்தாலும் சேகரித்திருக்க முடியும் என்றாலும் சரியல்ல.

16. எதிரி அ.சா.1 னின் வீட்டில் இருந்து நகைகள் எதுவும் எடுக்கவில்லை என்றாலும் புகார் தாரருக்கு ஆதரவாக கை ரேகையை சேகரிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் எதிரியை அடையாளம் காட்டுவதற்கு அடையாள அணிவகுப்பு செய்தேனா என்றால் இல்லை. எதிரி புகார்தாரருக்கு ஏற்கனவே தெரிந்த நபர் என்பதால் அடையாள அணிவகுப்பு நடத்த வில்லை. இவ்வழக்கில் கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் 15000 ரூபாய் நோட்டுகளின் எண்களை கைப்பற்றும் மகஜரிலோ மற்றும் படிவம் 91 லோ குறிப்பிடவில்லை என்றால் சரி.

17. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சிகளான கிராம நிர்வாக அதிகாரியின் முத்திரை பெறவில்லை என்றால் சரி. அவர் எடுத்து வரவில்லை. பஞ்சுகாளிப்பட்டி பஸ்டாப்பிற்கு அருகே உள்ள நபர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. எதிரியின் வீட்டிற்கு அருகே வசிக்கும் நபர்களை கைப்பற்றும் மகஜர் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரி.

18. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனைத்து பக்கங்களிலும் எதிரியின் கையெழுத்தை பெறவில்லை என்றால் சரி. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் இவ்வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் தட்டச்சு செய்தார்கள் என்று வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரி.

19. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வில்லை என்றாலும் நானாக தயாரித்துக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்

சம்பந்தமில்லை என்றாலும் சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 5.46 .மணி,

ஒம்/-ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்